**O.S.58/2021**

Date :02.11.2022

வா.சா.1 : கந்தன்

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்</u>

டேனியல் ஜெபகர் என்பவருக்கு நான் பவர் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு 23.10.2007 ல் தாவா சொத்தை கிரையம் கொடுத்ததாகவும் பிரதிவாதி தரப்பு வழக்கு என்று எனது வழக்கறிஞர் என்னிடம் கூறினார் என்றால் எனது வழக்கறிஞர் அவ்வாறு சொல்லவில்லை. இதற்கு முன்னால் நான் சாட்சியம் அளிக்கும் போது நான் அவ்வாறு கூறினேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தை ரத்து செய்ய மாவட்ட பதிவாளரிடமோ அல்லது வேறு எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பவர் ஆவணத்தில் நான் ரேகை இட்டு கொடுத்த ரேகையும் நீதிமன்றத்தில் நான் வைக்கும் ரேகையையும் ஒப்பிட்டு பார்த்தால் பவர் கொடுத்த உண்மை தெரியும் என்றால் சரிதான். நான் பவர் ஆவணத்தில் கைரேகை வைக்கவில்லை. அந்த கைரேகையை ஆய்வுக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய தயாராக உள்ளேன். பவர் ஆவணத்தில் கண்ட டேனியல் ஜெபகர் மற்றும் சாட்சிகள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். நான் கொடுத்த புகார் மனுவை எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு எந்த புகார் மனுவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது பிராதில் புகார் கொடுத்த தேதி மாதம் வருடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் பிராதில் கொடுத்துள்ளள தபசிலில் உள்ள எல்கை தவறு என்றால் சரியல்ல இருக்கும் இடத்தைதான் சொல்லியுள்ளேன். கூட்டு பட்டா அடிப்படையில் தாக்கல் செய்த இந்த வழக்கில் எனக்கு மட்டும் தனித்த எல்கை எப்படி வந்தது என்று பிராதில் விளக்கம் இல்லை என்றால் சரியல்ல. நானும் எனது சகோதர்களும் சொத்தை பிரித்து விட்டோம் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அளவுகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை ரெட்டியாரிடம் இருந்து கிரையம் புல எண்.308/1 கிரையம் வாங்கியுள்ளேன் என்றும் ஆனால் புல எண்.279 எவ்வாறு பிராதில் தபசில் சொத்தாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் நான் 279 ஐ சேர்க்கவில்லை. நான் தபசில் சொத்தின் விபரங்களை சரியான முறையில் கூறாததால் எனக்கு அதை பொறுத்து விளம்புகை பரிகாரமோ அல்லது வேறு எந்த பரிகாரமோ கிடைக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பவர் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து விட்டு அவரை அன்னியர் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பல உண்மை விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு

அந்த தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா தபசில் சொத்தை முத்துவேல் என்பவர் மேற்பார்வை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை விற்பனை செய்து விட்டு அதை விற்காதது போல பொய்யான முறையில் வழக்கு தாக்கல் செய்ததால் என்மீது கிரிமினல் நடவடிக்கை தொடர முடியும் என்றால் சரியல்ல. முத்து வேல் என்பவர் மேற்பார்வை பார்த்து வந்தார் என்றும் அதை நான் தான் தேவையில்லாமல் தடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் கொடுத்ததால்தான் நான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றும் நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணம் அனைத்தும் மோசடியானவை என்றால் சரியல்ல. பிராதில் கூறியது போல எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரருக்கும் சொத்தை கிரையம் கொடுத்துவிட்டு பின்பு விற்காதது போல வழக்கு தாக்கல் செய்வது வாடிக்கை என்றால் சரியல்ல. பவர் ஆவணம் மற்றும் அதன் அடிப்படையில் பிறந்த கிரைய ஆவணம் அதில் கண்ட சாட்சிகள் மற்றும் பவர் ஏஜென்ட் ஆகியோர்கள் மீது பிராது தபசில் சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என மறுத்து எவ்வித புகார் மனுவோ எவ்வித சட்ட அறிவிப்போ அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிராதில் கண்ட பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.